**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| P.W.– 2 தமிழ்ச்செல்வன் | MCOP No. 42/2025 | 02.03.2026. |
|---|---|---|

(சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது விபத்து பற்றி நினைவில்லை என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சம்மந்தமான விபத்து பதிவேட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன நபர் ஓட்டிச்சென்ற வாகனத்தில் நான் பயணம் செய்யவில்லைஎன்றும், எனக்கு விபத்தில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும், அதனால் தான் இழப்பீடு கேட்டு நான் தனியாக மனு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன விண்ணரசன் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிராக்டர் இவ்வழக்கு விபத்தில் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன விண்ணரசன் தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் விண்ணரசன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனம் எனது நண்பருக்கு சொந்தமானது ஆகும். விபத்து நடந்த சாலை இரண்டு வாகனங்கள் செல்லக்கூடிய அகலமான பிரதான சாலை என்றால் சரியல்ல,

குறுகிய சாலை தான் அதில் ஒரு பெரிய வாகனமும், ஒரு இருச்சக்கர வாகனமும் தான் செல்லமுடியும். விபத்து தார் ரோட்டில் தான் நடைபெற்றது. டிராக்டர் எதிர்திசையில் வந்தது. டிராக்டர் ரோட்டின் வலது புறம் ஏறிவந்து இடது புறமாக சென்று கொண்டிருந்த எங்கள் இருச்சக்கர வாகனத்தின் பம்பரில் மோதிவிட்டது. நாங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம்.

விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான், விண்ணரசனும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. விண்ணரசனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு தான் இறந்துபோனார் என்றால் சரிதான். தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் மோதிய வேகத்தில் தலைக்கவசம் தலையிலிருந்து கழன்று சென்றுவிட்டது. தலைக்கவசத்தின் chin strap சரியாக மாட்டாததால் கழன்றுவிட்டதா என்றால் இல்லை, இடித்தவேகத்தில் கழன்று விட்டது. விண்ணரசன் தான் அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று டிராக்டர் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எதிரே வந்த டிராக்டருடன் டிப்பர் இணைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த டிப்பரில் விபத்து சமயத்தில் லோடு இருந்தது என்றால் மணல் இருந்தது, அதன் மேல் சிமெண்ட் மூட்டைகள் போல் இருந்தது சரியாக தெரியவில்லை. விண்ணரசன் எனது நண்பர் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

விபத்து டிராக்டர் மோதி ஏற்பட்டதா அல்லது டிப்பர் மோதி ஏற்பட்டதா என்றால் டிராக்டர் மோதி தான் ஏற்பட்டது.

**1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி நீதிமன்ற கேள்வியை பொறுத்து குறுக்கு விசாரணை** – இல்லை.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

சாட்சியின் கையொப்பம்: ஒம்./–தமிழ்ச்செல்வன்

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

INBAKARTHICK

Digitally signed by INBAKARTHICK
Date: 2026.03.02 12:36:29 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.